★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

கலை: 20 புரட்டாதி 27 ஜூல்கரி 10 இதழ்: 244
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13-10-78

யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூபா 1/- மட்டுமே
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA, JAFFNA
RECEIVED
13-10-78
PERIODICALS DIVISION
LIBRARY

எம். எல். வி. தலைமை வகிப்பார்

சென்னை, ஒக். 12

தமிழிசைச் சங்கத்தின் வருடாந்த இசைவிழா டிசம்பர் மாதம் 22-ம் திகதி சென்னையில் ஆரம்பமாகும். மேலவைத் தலைவர் திரு. சிவஞானம் ஸ்ரீராமணியா விழாவை ஆரம்பித்துவைப்பார். திருமதி எம். எல். வசந்தகுமாரி இம்முறை விழாவுக்குத் தலைமை வகிப்பார். இசைப் பேரறிஞர் என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்படும். 29-வது பண்

(6ம் பக்கம் பார்க்க)

தமிழ்ஈழக் கோரிக்கை பற்றி

ஜமேய்க்கா மகாநாட்டில் அமிர் கண்ணியமாகப் பேசினர்

நாடு திரும்பிய வர்த்தக அமைச்சர் 'லலித்' தகவல்

(கொழும்பு)

ஜமேய்க்காவில் நடைபெற்ற பொதுநல நாடுகளின் பாராளுமன்ற மகாநாட்டில் இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல்திபருமான திரு. அ. அமிர்தலிங்கம் தமிழ் ஈழக் கோரிக்கைபற்றி விளக்கிப் பேசினர், ஆனல் அவர் மிகப் பொறுப்புணர்ச்சியோடும், கண்ணியமாகவும் தமது கருத்துக்களை வெளியிட்டார்.

இத்தகவலை நேற்று பத்திரிகையாளர் மகாநாடொன்றில் இலங்கை வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு, லலித் அத்துல்தமுதலி வெளியிட்டார்.

திரு. அமிர்தலிங்கம், கருத்தாழமிக்க சொற்களால் தமிழ் ஈழம் பற்றி விளக்கிப் பேசிய போதிலும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில், அது எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லையென்று அமைச்சர் கூறினர்.

''தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்களைப் பூரணமாகப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இது, சிறுபான்மை மக்களின் கட்சியாகும். இலங்கையில் 22 லட்சம் தமிழ்மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் 40 சதவீதமானவர்கள் இந்தியப் பதிவுப் பிரசைகள். 45சதவீதம்இலங்கைத்தமிழர். 15சத வீதமானோர் தமிழ்பேசும் முஸ்லிம்கள். இவர்களில் பெரும்பாலானோர் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கவில்லை. இதை திரு. அமிர்தலிங்கம் 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ஒப்புக்கொண்டுள்ளார் என்று அமைச்சர் கூறினர்.

''கடந்த தேர்தலில் வவனியா மன்னர், திருக்கோணமலை, பட்டிருப்புத் தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வாக்குகளிலும் பார்க்க, அதிக வாக்குகள் ஐக்கிய தேசியக்கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் கிடைத்தன. இந்தியப் பதிவுப் பிரசைகள், தமிழ் ஈழத்துக்கு ஆதரவு வழங்கவில்லை. அந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் அரசில் சேர்ந்துகொண்டு அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளார். வடக்கு, கிழக்கிற்கு அப்பால் வாழும் முஸ்லிம்களும், தமிழ்மக்களும் தமிழ் ஈழத்திற்கு ஆதரவு வழங்கவில்லை.

85 வீத தமிழர் ஆதரவு இல்லை

இப்படி பார்க்கும்போது தமிழ்மக்களில் 85 வீதமானோர் தமிழ ஈழத்துக்கு ஆதரவு இல்லை. அரசு, சிறுபான்மை, பெரும்பான்மை என ஒருபோதும் பாகுபாடு காட்டாது இரண்டாம் தரப் பிரஜையென ஒருவரையும் ஒதுக்கமாட்டாது. சகல இனமக்களுக்கும்சமவாய்ப்பும், அபிலிருத்தித் திட்டங்களில் எதுவிதபாகுபாடும் காட்டாது ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப நாங்கள் சங்கர்ப்பம்

[6-ம் பக்கம் பார்க்க]

பிரபல நடன ஆசிரியர் திரு. ய தொம்மைக்குட்டியின் மாணவி செல்வி வாணி கந்தவனத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை யாழ். வீரசிங்கம மண்டபத்தில் இடம்பெறும்.

சோவியத் நடனக் குழுவினர்களுக்கு

தமிழ்ப்பகுதிகளில் ஏன் நிகழ்ச்சிகள் இல்லை?

பத்திரிகையாளர்மாநாட்டில் விளக்கம்

(கொழும்பு)

இம்மாதம் 17ந் திகதி, இலங்கை வரும் சோவியத் நடனக் குழுவினர், யாழ்ப்பாணத்திற்கும், மட்டக்களப்புக்கும் சென்று நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடுசெய்யப்படாதது பற்றி நேற்று முன்தினம் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

சோவியத் தூதரகத்தின் முதலாவது செயலாளரும், இலங்கை கலாச்சார அமைச்சின் உயர் அதிகாரி திரு. ஜயதிலகாவும் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

இலங்கை-சோவியத் கலாசாரப் பரிவர்த்தனை உடன்படிக்கையின் கீழ் இலங்கை வரும் இக்குழுவில், சிறந்த பல கலைஞர்கள் அங்கம்வகிக்கிறார்கள். கண்டி, காலி, மாத்தளை, குருநாகல் போன்ற இடங்களில் இவர்களின் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணம், மட்டக்

(7-ம் பக்கம் பார்க்க)

நேரடி நடவடிக்கை என்றால் என்ன அர்த்தம்?

சன்சோனி கமிஷனிடம் சம்பந்தர் விளக்கம்

(திருகோணமலை)

''சமாதானம் மூலமாகத் தமிழ் ஈழம் பெறமுடியாவிட்டால், நேரடி நடவடிக்கை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருக்கிறது'' என்று திருகோணமலை எம். பி. திரு. சம்பந்தன் நேற்று சன்சோனி கமிஷன் முன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறினர்

சட்டத்தரணி விஜயதுங்க: சமாதானமான முறையில் முடியாவிட்டால் நேரடி நடவடிக்கை என்பதின் அர்த்தமென்ன?

சம்பந்தன்: சாத்வீகமான முறையில் தன்னைத்தானே வருத்திக்கொண்டு போராடுவது.

சட்டத்தரணி: இது சமாதானமான முறையல்ல.

சம்பந்தன்: இதற்கு மேல் உங்களுக்கு என்னல் விளக்கம் தரமுடியாது.

கமிஷனர்: நேரடி நடவடிக்கை என்ருல் என்ன?

சம்பந்தன்: முன்பு தமிழ்மக்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளும் விதத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தினேம். முடியாத நிலையில் நேரடி நடவடிக்கையாக 1961ம் ஆண்டில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தோம். இதுதான் எமது நேரடி நடவடிக்கை.

(விசாரணை தொடர்கிறது)

மக்னமாரா இன்று கலாவெவவுக்கு விஜயம்

(கொழும்பு)

உலக வங்கியின் தலைவர் திரு. ரொபர்ட் மக்னமாரா நேற்று மாலை கொழும்பு வந்துசேர்ந்தார் அவரை விமான நிலையத்தில் நிதி யமைச்சர் திரு. ரொனி டி

[6-ம் பக்கம் பார்க்க]

வர் விளம்பரம்

தேவை

யாழ். பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கும் பெஸ்ரோன் விளம்பர சேவைக்கு பெண் அறிவிப்பாளர்கள் தேவை. நேரில் சமுகம்தரவும், 15-10-78 ல் காலை 9 மூதல் 12 மணி வரை நித்தியின் சிங்வயர் றேடியோனிக்ஸ் றெக்கோடிங் பார், ஸ்ரீதர் சினிமா முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
0565

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் ஒரு வீடும் நாவற்குளியில் வீடுகட்ட காணியும் தேவை. வே. நடராசா, சட்டத்தரணி, நெடுங்குளம்வீதி, யாழ்ப்பாணம்.
0553

விற்பனைக்கு

SANYO — 2×1 றேடியோ விற்பனைக்குள்ளது. இறக்குமதி செய்யப்பட்டது. FMMW SW1, SW2 கொண்டது. புத்தம்புதிது. க. முருகரத்தினம் J. P., 109, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
0536

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் வருகின்ற சனி, ஞாயிறு (14, 15, திகதிகளில்) சகாய விற்பனை நடைபெறும். மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன்பையும் மேலுறைகளுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம்.
0566

நல்ல நிலையில் உள்ள Underwood Typewriter விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் வ. செல்வராசா, மடத்தடி, சாவகச்சேரி.
0567

பயிற்சி

வெளிநாடுகளிலும், கப்பல்களிலும் வேலைகள் பெற நவீன வெளிநாட்டு முறையில் தொழிற்பயிற்சிகள். வெல்டிங் (Electric & Gas) இலெக்ரிக் வயறிங், Radio Officers P M G Certificate, City & Guilds (Electrical) முதலியன. ஆங்கிலமும், St. John's Ambulance முதலுதவிப் பயிற்சியும் இலவசமாகக் கற்பிக்கப்படும். National Institutes 57, 59. பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்
0489

மூன்று மாத மின்னியல் டிப்ளோமா ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு 16-10-78க்கு முன் தொடர்பு கொள்ளவும். அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம்.
0543

ஜீ. ஏ. யிடம் கோரிக்கை

]வட்டுக்கோட்டை]

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் உள்ள கடலை பொதுமக்கள் தனியார் மச்சுவாய் மூலம் கடப்பதற்கு காரைநகர் ப. நோ. கூ சங்கம் எதுவித பணமும் அறவிடக்கூடா தென்று கட்டளை இடுமாறு லங்கா-பாரத ஒற்றுமை முன்னணி அவை கூட்டுநர் டாக்டர் திரு. ஆ. தர்மலிங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டுள்ளார். [க]

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் சச்சிதானந்த முதலி என்பவரின் மரணசாதன சொத்தின் விடயத்தில்,

— மரணமெய்தியவர்

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த சச்சிதானந்த முதலி கைம்பெண் பகவதி அம்மா.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்: இல. 3359

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக/மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

வரைவு:

இ. கமலநாதன்
மனுதாரின் சட்டத்தரணி.

1978-ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
0559

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் கொக்குவில் காங்கேசன்துறை வீதி 81-ம் இலக்கத்தில் வசித்த மாணிக்க நடராசா பெண் ஜெகசோதி என்பவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்

நடராஜா மாணிக்க நடராஜர், 81, காங்கேசன்துறை வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. த/3399

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்

பதிவாளர்.

1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.
0504

சிலை விரைவில் நிறுவப்படும்

(புலோலி)

பருத்தித்துறைநகரசபையின் முன்னைநாள் தலைவரும் சட்டத்தரணியுமான அமரர் ந. நடராசாவின் உருவச்சிலை அமைப்புச் சம்பந்தமான சகல வேலைகளும் முடிவுற்று வருகின்றது. சிலை விரைவில் நிறுவப்படுமாம். [அ]

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுன்னாகம் காலஞ்சென்ற நாகமணி இராசசிங்கம் பெண் சிவஞானேஸ்வரி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்.

- மரணமெய்தியவர்.

விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம் அல்லது சுப்பிரமணியம் - சுன்னாகம்.

- மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. 13.

எதிராக

1. சுப்பிரமணியம் பெண் றோன்மணி-சுன்னாகம்.
2. நமசிவாயம் திருநாவுக்கரசு.
3. நமசிவாயம் சுந்தரமூர்த்தி - பன்னாலை, தெல்லிப்பழை.
4. நமசிவாயம் வாதவூரர் அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
5. நாகமணி சிவப்பிரகாசம் கந்தளாய்.
6. நாகமணி பாலசிங்கம்.
7. நாகமணி பாலசுப்பிரமணியம் - அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
8. நாகமணி குணரத்தினம் கிளிநொச்சி.
9. வெற்றிவேலு தம்பித்துரையும் பெண்.
10. தனலட்சுமியும் இருவரும் அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

-எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற கட்டளைப்படி

றி. ஜெயராசசிங்கம்.
பதிவாளர்

1978ம் ஆண்டு ஆடி மாதம் 31ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
என்னால் எழுதப்பட்டது.

செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
0546

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

"தமிழினத்தின் அவலநிலையை உலகிற்கு உணர்த்தியிருக்கலாம்"

(யாழ்ப்பாணம்)

"புதிய அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் செய்யாமல்விட்டு, கூட்டணியினர் தமிழினத்தின் அவலநிலையை உலகநாடுகளுக்கு எடுத்துக் காட்டியிருக்கலாம். இந்த அரிய சந்தர்ப்பத்தை கூட்டணியினர் தவறவிட்டுவிட்டனர்"

பத்தைமேனியில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் கருத்தரங்கில் உரையாற்றிய தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ரீ. ராசரத்தினம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: "தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் 17 பேரும் சத்

(5-ம் பக்கம் பார்க்க)

கேள்வி விளம்பரம்

கிளிநொச்சிப் பட்டணம் கிளிநொச்சி

கிளிநொச்சிச் சந்தையில் இரண்டு ஆட்டிறைச்சிக்கடைகளும், இரண்டு மாட்டிறைச்சிக்கடைகளும், பரந்தன் சந்தையில் ஒரு ஆட்டிறைச்சிக் கடையும் ஒரு மாட்டிறைச்சிக் கடையும் அமைத்து 01-01-1979 தொடக்கம் 31-12-1979 வரைக்கும் கட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பனை செய்வதற்கான கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள்முறையே ரூபா 100/- கேள்விப் பிணைப்பணமாகவும், ரூபா 10/- கேள்விப்பத்திரப் பணமாகவும் செலுத்துவதன் மூலம் 31-10-1978 நண்பகல் 10-00 மணிவரை வழங்கப்படும், கேள்விப்பத்திரடபணம் ரூபா 10/-ம் மீளளிக்கப்படமாட்டாது.

02. கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டு 'விசேட ஆணையாளர் பட்டணசபை அலுவலகம், கிளிநொச்சி என விலாசமிடப்பட்டு 31-10-78-ற்குப் பிந்தாது கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலுறையின் இடது பக்கத்தில் கேள்வியின் பெயர் குறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட
ஆணையாளரின்பணிமனை,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.
11-10-1978.
0562

விளம்பரம் கைதடி கிராமாட்சி மன்றம்

பதவி வெற்றிடம் மலகூட தோட்டவேலை தொழிலாளி

மேற்படி பதவிக்கு கைதடி கிராமாட்சிமன்றம் கீழ்க்குறிப்பிடும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் 19-10-78-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

வேதனம்: திரட்டியது நாளொன்றுக்கு ரூ. 5/60-ம் அதற்காய விசேஷ படிகளும்.

வயது: 19-10-78-ம் திகதி அன்று 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிறதகைமைகள்:

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் வைத்திருத்தல் வேண்டும்.
3. மேற்படி வேலையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. பிறப்பு நற்சாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கவேண்டும்.
5. 3-ம் வகுப்புவரை கல்வி கற்றிருத்தல் விரும்பத்தக்கது.

மேலும் மேலதிகமான விபரங்களை கைதடி கிராமசபையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஜே. செந்தில்நாதன்
விசேஷ ஆணையாளர்,
கிராமாட்சிமன்றம்,
கைதடி.

கிராமாட்சிமன்றப்-
பணிமனை, கைதடி.
11-10-78.
0564

கேள்வி விளம்பரம்

கிளிநொச்சிப் பட்டணசபை

கீழ்க் குறிப்பிட்ட வேலைகள் சம்பந்தமான கேள்விகள் 31-10-78 முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்,

குறிப்பிட்ட வேலைகளுக்கு அவற்றிற்கு நேரே குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை 25-10-1978 பிற்பகல் 2-00 மணிவரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

விபரம்

வேலையின் பெயர்	கேள்விப் பத்திரப் பணம்	கேள்விப் பிணைப் பணம்
1. திருவையாறு 3ம் பகுதியில் கிணறு ஒன்று வெட்டிக் கட்டுதல்,	25-00	250-00
2. கிளிநொச்சி பஸ் நிலையம் திருத்துதல்.	15-00	100-00
3. கரடிப்போக்கு உப மின் நிலையத்திற்கு கொங்கிறீட்மேடை அமைத்தல்.	10-00	50-00
4. சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஆறு வீடுகள் கட்டுதல்.	25-00	250-00

எம். சின்னையா,
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி. 10-10-1978.
0563

ஈழநாடு
The Eelanaadu

மாவட்ட அமைச்சர்கள்-1

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்கள் அனைத்துக்கும் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர்.

மாவட்ட அமைச்சர்களின் கடமைகள், பொறுப்புக்கள், அதிகாரங்களனைத்தும் அறிவிக்கப்பட்டு நியமனம் பெற்ற மாவட்ட அமைச்சர்கள் அனைவரும் சத்தியப்பிரமாணம் செய்து பதவியும் ஏற்றுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரண்டு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் அனைத்துக்கும் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுப் பதவியேற்றுள்ளனர்.

இந்த இரண்டு மாவட்டங்களுக்கு மட்டும் இன்னும் அமைச்சர்கள் நியமிக்கப்படாததற்குக் காரணம் என்ன?

மாவட்ட அமைச்சர்பதவி புதியதுதான். ஆனால் திடீரென்று இப்போதுதான் உருவாக்கப்பட்டதல்ல. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து மாவட்ட அமைச்சர் நியமனம் பற்றி ஆலோசிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு விளக்கமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் மாவட்ட அமைச்சர் பதவி பற்றியும் ஆலோசனை செய்து விவாதித்திருக்கிறது. மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதில்லையென்று கூட்டணி எம்.பி.க்கள் சிலரும் மேடைகளில் கூறிவந்திருக்கின்றனர். ஆனாலும் கூட்டணி இப்பதவி சம்பந்தமாகத் திட்டவட்டமான முடிவு எதையும் மேற்கொண்டு பகிரங்கமாக இதுவரை அறிவிக்கவில்லை.

இன்று நான்கில் மூன்று பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் சென்றபொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி பீடத்திலிருக்கிறது. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அது முனைந்துநிற்கிறது. அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைகளை எதிர்க்கட்சியினர் விமரிசனம் செய்கின்றனர்.

சென்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எப்படிப் பெரும்பான்மைப் பலம் பெற்றதோ அதேபோல் தமிழர் விடுதலைக் கூட்டணியும் வடக்கு மாகாணத்தில் மக்களின் அமோக ஆதரவைப்பெற்று வெற்றியீட்டியது. கிழக்கு மாகாணத்திலும் கூட்டணிக்குக் கணிசமான அளவு ஆதரவு இருந்தது.

சென்ற பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கூட்டணியுடன் போட்டியிட்ட சுயேச்சைகளும் மற்றும் பல கட்சிகளும் தமிழ்ஈழம், தனிநாடு என்ற கோரிக்கையை முன்வைத்தே போட்டியிட்டன. 'தமிழ்ஈழம்' அமைப்பதென்று வட்டுக்கோட்டையில்கூடிய தமிழர்கூட்டணியின் முதல் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தையே கூட்டணி தனது கோரிக்கையாக வைத்து தேர்தலில் போட்டியிட்டது.

தமிழ்ஈழம் தேர்தலில் வெற்றியீட்டியதும் கிடைத்துவிடும் என்று கூட்டணியும் எதிர்பார்த்ததில்லை. மக்களும் எதிர்பார்த்ததில்லை; இப்படி எதிர்பார்க்கவும் முடியாது.

விடுதலை என்பது தேர்தல் மூலம் கிடைக்கக்கூடியதல்ல என்பது உலகவரலாறு விடுதலை என்ற இலட்சியத்தை அடைவதற்குப் பல வழிகள், யுக்திகளை பின்பற்றிக் கையாள வேண்டியது சாணக்கியம். இந்திய விடுதலைப்போராட்டத்தில் கூட இதற்குச் சான்றுகள் பலவுள.

கூட்டணியும், தமிழர் விடுதலை கோரிச்சென்ற தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் சுயேச்சைகளும் மாவட்ட அமைச்சர் பதவி சம்பந்தமாக என்னவழியைப் பின்பற்றப்போகின்றன? இதுபற்றி நாளை ஆராய்வோம்.

நாத்திகவாதம் சைவத்திற்குப் புதியதல்ல

வேத காலத்திலேலே கடவுள் இல்லை என்னும் நாத்திகக் கூட்டத்தினர் இருந்துவந்துள்ளனர் என்பது வேதத்தில் வேதநிந்தனையாளர் பற்றிய குறிப்புகளிலிருந்து அறியக்கிடக்கின்றது. தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத்திலேயே நாத்திக வாதம் இருந்திருக்கின்றது. கடவுள் உண்டு என்ற நம்பிக்கை பிறந்த பொழுதே அதன் எதிரொலியாக இல்லை என்ற வாதமும் பிறந்திருக்கவேண்டும். திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் ''ஆத்தமாஞர் அயலவர் கூடி நாத்திகம்பேசி நாத்தழும் பேறினர்'' என்று பாடுவதால் அவர் காலத்திலும் நாத்திகர் இருந்தனர் என்று அறியலாம், மேலும் 'உலோகாயதம் எனும் ஒன்றிற் பாம்பின் கலாபேதத்த கடுவிடமெய்தி' என்பதிலிருந்து பிற்காலத்தில் உலோகாயதத்தையும் நாத்திகமாகவே கருதினர் ஆத்திக அறிஞர்கள்.

ஒருவனே தேவன் என்பதே தங்கள் தெய்வக்கொள்கை என்கின்றனர். இதுவும் சைவத் திருமூலரிடம் கடன் பெற்ற கருத்தாகும். நாத்திகர் பற்றி காந்தியடிகள் 'நாத்திகனுடைய நாத்திகமும் அவனே அவனுடைய எல்லையற்ற கருணையே நாத்திகனை இரு என்று அனுமதி தருகின்றது' நாத்திகர்கள்கூடச் சத்தியத்தை வழிபடுகின்றார்கள் ஏன்? சத்தியத்தில் அவர்களுக்குள்ள தீவிரப்பற்றினால், அவர்கள் உள்ளத்தில் எழும் சந்தேகத்தை வைத்துக் கடவுளே இல்லையென்ற அளவிற்குச் செல்கிறார்கள்' எனக் கூறுகின்றார்.

நாத்திகராஞேர் கடவுள் இல்லையென்று பேசித்திரிவதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். அவர்களின் அறிவுவாதத்திலே கேட்போர் மயங்கலாம். ஆத்திகனுடைய கற்பனைக் கருத்துக்கள், அவற்றையொட்டிய பயனற்ற பழக்க வழக்கங்கள், நாத்திகத்தை வளர்க்கும் கருவியாகலாம். ஆனால் நாத்திகனுடைய வாதம் வன்மையைக் கொண்டே அவனுடைய சூன்யவாதத்தை மெய்யென்று நம்பி மயங்குவது மதியீனமாகும்.

பத்துப்பாட்டுகள் அமைந்தது ஒரு பதிகமாகும். ஆயினும் தமது பதிகங்களினதும் பதினொராவது திருப்பாடலில் சம்பந்தர் பயனைச் சொல்லி முடிப்பார். இதற்கு திருக்கடைக்காப்பு என்று பெயர். அத்தோடு தம்பாடல் பற்றிய சிறப்பையும் சொல்லியிருப்பார் 'ஒரு நெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த திருநெறியதமிழ்' 'ஒலிகொள் சம்பந்தன் ஒண்தமிழ்' எனவரும் அடிகளால் தம்மையும், தாம்பாடிய திருப்பதிகங்களையும் பலவாறு சிறப்பிக்கின்றார் என்பதை அறியலாம்

சம்பந்தர் அருளியவை

ஞானத்தமிழாகிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் சம்பந்தர் 383 திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளன. முதல் திருமுறையில் 136 இரண்டாம் திருமுறையில் 125, மூன்றும்

பண்ணிசைக்கலாநிதி
எஸ். கே. சிவபாலன்

திருமுறையில் 125 திருப்பதியங்களும் அடங்கும் திருமுறைகளுள்ள புராணத்தில் நம்பியாண்டார் நம்பிகள் பன்புற்ற சம்பந்தர் பதிகம் 'முந்நூற்றெண்பத்து நான்கு என்று குறிப்பிடுகின்றார். [அடங்கன் முறையில் தற்போது 383 திருப்பதியங்களே காணப்படுகின்றன. ஆராய்ச்சியின் பயனாக திருவிடைவாய் என்னும் தலத்திற்குரிய சம்பந்தர் பதிகம் ஒன்று கல்வெட்டிலிருந்து கிடைத்தது. இதுநம்பியாண்டார் வகுத்த பதிகங்களுள் அடங்காநிற்கின்றது. நமக்கு தற்போது கிடைக்கப்பெற்ற பதிகங்களில் சில பிரசுரங்கள் காணாமை,* முழுமையாக இல்லாமை, சிதைந்து குறைவுற்றமை ஏட்டிலிருந்து கிடைத்தவை என்பதற்குச் சான்றாகும். பாடல்பெற்ற சிவத்தலங்கள் இருநூற்றுப்பத்தொன்பதாகும்.

[வளரும்]

வெள்ளிவிருந்து--7

திருஞெம்பாப் பாடல்களில் 'எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள் எங்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்று முறையிடுவதால் கல்யாணமாகாத கன்னிகளும் தெய்வதம்பிக்கையற்ற நாத்திகர்களை வெறுத்தனர் என்பது புலனாகின்றது. மேலும் 'அன்னவரேஎங்கணவர் ஆவார் அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்' என்று பாடுவதாலும் நாத்திகரை வெறுத்து ஆத்திகருக்கே வாழ்க்கைபடவிரும்பினர் அந்நாளைய கன்னிப்பெண்கள் என்பதையும் அறியலாம் அப்பர் பெருமான் 'நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே' என்று திருவாரூக்கா பதிகத்துள்பாடி நாத்திக வாதம் தம்காலத்திலும் இருந்தமை அறிவிக்கின்றார்.

பகுத்தறிவாளர் எனத் தம்மைத்தாமே கூறிக்கொண்டும் தம்மை பகுத்தறிவாளர் என மெச்சிக்கொண்டும் திரியும் பகுத்தறிவாளர் 'ஒன்றேகுலம்

ஆயுள்குறுகியது. மரணநேரம் நிச்சயமற்றது. ஆகவேயோகசாதனத்தை ஊக்கமாகத் தொடங்கு.
—ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதி

இலக்கியப் போட்டியில் பரிசுகள்

[யாழ்ப்பாணம்]

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள தமிழ்மன்றம் ''கலாவல்லி'' சஞ்சிகையுடன் இணைந்து நடத்திய இலக்கியப் போட்டி முடிவுகள்

கவிதை; 1.ம் பரிசு. ஆறு. இராசேந்திரம். 2-ம் பரிசு திருமலைச்சந்திரன் 3. பரிசு எம். ஐ. எல். பக்கீர்தம்பி.

கட்டுரை; 1-ம் பரிசு. சுபதினி செல்வராஜா, 2.ம் பரிசு வே. சிவலிங்கம், 3-ம் பரிசு சுப்பையா ஜெகதீஸ்வரி

சிறுகதை 1-ம் பரிசு செம்பியன் செல்வன், 2-ம் பரிசு காவலூர் ஜெகநாதன் 3-ம் பரிசு சதாஅற்புதம்.

பாராட்டுப் பெறும் சிறுகதைகள் ''திக்குவலைசமால்'' ''பொ. சூரியகுமாரன்'' (ஈ)

நாளை நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி பத்மநாதன் எழுதிய 'யாழ்ப்பாண இராச்சியம்' நூல் வெளியீட்டுவிழா நாளை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

விழாவிற்கு, யாழ். வளாக தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமைவகிப்பார். நூல் ஆய்வை, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், பதில் எதிர்க்கட்சி முதல்வருமான திரு. எம். சிவசிதம்பரம், வரலாற்றுத் துறை பேராசிரியர், கலாநிதி கா. இந்திரபாலா, எம். பி. வெ. யோகேஸ்வரன், எம். வி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் நிகழ்த்துவர். விழாவிற்கான ஏற்பாட்டை ஈழத்தமிர் எழுத்தாளர் பேரவை ஒழுங்கு செய்துள்ளது. (கெ)

சன்சோனிக்கமிஷன் விசாரணை:

''கந்தளாய் சீனித்தொழிற்சாலையில் தமிழர்கள் தாக்கப்பட்டனர்''

திருமலை எம். பி. தொடர்ந்து சாட்சியம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் 21 தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். பெரும்பாலும் 3சிங்களவரே கொலை செய்யப்பட்டனர்.

திருகோணமலையில் நடைபெற்றவரும் சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளித்த திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

சிங்கள மகாஜன பெரமுனையின் சட்டத்தரணி திரு. விஜயதுங்காகுறுக்குவிசாரணை செய்தார்.

திரு. சம்பந்தன் கூறிய தாவது! தமிழ்ஈழத்தில் சிங்களவருக்கும் வாழும் உரிமை உண்டு. அவர்களை அகிருந்து அப்புறப்படுத்தும் நோக்கம் எதுவும் கூட்டணிக்கும் கிடையாது.

தமிழ் மக்களின் சுதந்திரம் உரிமைகள் ஆகியன பறிக்கப்பட்டதன் காரணமாக தமிழ் மக்கள் மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் வாழவேண்டிய கட்டத்தில் இருந்த போதுதான் கூட்டணி உருவாகியது.

தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளை ஒன்று சேர்த்தே கூட்டணி உருவாக்கப்பட்டது. அதில் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் அங்கம் வகித்தது. அத்துடன் முஸ்லீம் இயக்கம் ஒன்றும் அதில் அங்கம் வகித்தது.

தமிழ்மக்களின் பிரச்னைகள் தீருவதற்கு தனிநாடு ஒன்றுதான் முடிவான முடிவு என்பதை தமிழ்த்தலைவர்கள் தீர்மானித்தனர். தமிழ்மக்கள் குடியரசுதினத்தைப் பகிஷ்கரித்தனர். அவர்கள் புதிய அரசியல்சட்டத்தை ஏற்காத தினாலேயே குடியரசுதினத்தை பகிஷ்கரித்தனர்.

அமரர் செல்வநாயகம். அஸ்தி திருமலை மாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட போது திருகோணமலையில் கலவரம் ஏற்பட்டது துரதிர்ஷ்டவசமானதாகும். இதனைஅடுத்து அஸ்தி ஊர்வலமும், செல்வா அனுதாபக்கூட்டமும் தவிர்க்கப்பட்டன.

செல்வாவின் அஸ்திக்கு மரியாதை செய்யுமுகமாக ஏற்பாடுகளை மேற்கொண்டவாலிபர்கள் மற்றவர்களை தாக்கியிருக்கலாம் என்ற கூற்றை நான் ஏற்கமாட்டேன்.

திருமலை மாவட்டத்தில் ஆகஸ்ட் கலவரத்தின்போது எந்தவொரு சிங்களவரின் வாகனமும் சேதப்படுத்தப்படவில்லை. ஆனால் ஜூன் மாதத்தில் நடந்த கலவரத்தில் ஒரேயொரு சிங்களவரின் கார் சேதப்படுத்தப்பட்டதாக கேள்விப்பட்டேன்.

உப்புவெளி பொலீஸ் பொறுப்பதிகாரி வசந்த டீ சில்வா ஜூன் கலவரத்தின் போது தமிழ்மக்களை தேவையற்றமுறையில் தாக்கினார். அன்பு வழிபுரம் பாடசாலை அதிபர் எந்தக்காரணமும் இன்றி சில்வாவினால் தாக்கப்பட்டார் சில்வா பல சிங்களவர்களைத் தூண்டி தமிழ் மக்களைத் தாக்கும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார் என அறிந்தேன்.

கந்தளாய் சீனிக்கூட்டுத் தாபனத்தில் ஆகஸ்ட் கலவரத்தின்போது தமிழர்கள் தாக்கப்பட்டனர். இதன் பின்பு தமிழர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். எனவே இக் கூட்டுத்தாபனத்திற்கு சென்று தாக்குதல் குறித்து ஆராய நான் முற்படவில்லை. பேராறு கொலனியில் 80 தமிழ்க் குடும்பங்களே உள்ளன. அங்கு பல தமிழரின் வீடுகள் எரிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் பரவலாக தாக்கப்பட்டதை அடுத்து தம்மை பாதுகாப்பதற்காக ஒருசில இளைஞர்கள் தயாரித்த கைக்குண்டு வெடித்த போதே தமிழ் இளைஞர்கள் மரணமானார்கள். இதில் துரைராஜா காயமடைந்தார் ஆனால் திருமலை மாவட்டத்தில் எந்தவொரு சிங்களவரும் கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகி காயமடையவில்லை.

சிக்மகளூர் இடைத்தேர்தலில்

இந்திராகாந்திக்கு அஇஅதிமுக ஆதரவளிக்கும்

எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, அக் 12

தென் கர்நாடக மாநில சிக்மகளூர் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியை ஆதரிப்பதென்று அனைத்திந்திய அண்ணாதிராவிடமுன்னேற்றக் கழகம் தீர்மானித்துள்ளது.

அ. தி. மு. க. பொதுச்செயலாளரும், தமிழக முதலமைச்சருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கழகத்தின் இம் முடிவை நேற்று அறிவித்தார்.

இத்தொகுதியில் ஆளும்ஜனதாகட்சி சார்பில் முன்னாள் கர்நாடக முதலமைச்சர் திரு. வீரேந்திரபட்டீல் போட்டியிடுகிறார்.

திருமதி காந்திக்கு இந்த இடைத்தேர்தலில் ஆதரவளிக்குமாறு கர்நாடக முதல்வர் திரு தேவராஜ் அர்ஸ் அ. இ. அ. தி. மு. கவுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளையில் மத்திய விவசாய பாசன அமைச்சர் திரு. பர்ஞலா திரு எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து இந்த இடைத்தேர்தலில் ஜனதா கட்சிக்கு ஆதரவளிக்கவேண்டுமென்று கேட்டிருந்தார்.

கடந்தவருடம் நடைபெற்ற தேர்தலில் தோல்வியடைந்த திருமதி இந்திரா இது வரை ஒதுங்கியிருந்துவிட்டு சிக்மகளூர் தொகுதியில் போட்டியிடுவதற்கு தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். (இ)

யாழ். கச்சேரி பழைய பூங்காவில் நடைபெற்ற சாரண இயக்கத்தினரின் வருடாந்த விழாவின் போது மில்க்வைற் அதிபர் 'சாரணீயம்' எனும் நூலை வெளியிட்டுச் சாரண மாவட்ட ஆணையாளர் திரு. சுந்தமூர்த்தியிடம் ஒப்படைப்பதைப் படத்தில் காண்க.

ஒரு லட்சம் பேர் வீடிழப்பு!

மணிலா, அக். 12

பிலிப்பைன்சில் தொடர்ச்சியாக வீசிய சுடும்புயல் காரணமாக ஒரு லட்சம் மக்கள் வீடிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. [இ]

மட்டுவிலில் கருத்தரங்கு

(மட்டுவில்)

மட்டுவிலில் தமிழ் காங்கிரஸ் கருத்தரங்கு இன்று தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றுவார்கள். (க)

அமெரிக்க ஐ. நா. பிரதிநிதி-இயன்சிமித் சந்திப்பு திடீர் ரத்து!

கார்ட்டர் சந்திக்க மறுத்ததின் எதிரொலி

வாஷிங்டன், அக். 12

ரெடீஷியப் பிரதமர் திரு. இயன்சிமித்துக்கும் அமெரிக்க ஐ. நா. பிரதிநிதி திரு அன்ரு யங்குக்கும் இடையே இன்று நடைபெற்றிருந்த பேச்சுவார்த்தைகள் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

திரு. இயன் சிமித்தைச் சந்திக்க அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் மறுப்புத் தெரிவித்ததையடுத்தே மேற்படி சந்திப்பு திடீரென ரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரெடீஷிய விவகாரம் குறித்தும் திரு. இயன் சிமித்தின் அமெரிக்க விஜயம் குறித்தும் எழுந்துள்ள கருத்துவேறுபாடுகளை அடுத்தே இச்சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில், ரெடீஷிய இடைக்கால அரசுக்கு அமெரிக்காவின் ஆதரவைப் பெறத் தாம் தவறிவிட்டதாக திரு. இயன்சிமித் பத்திரிகைநிருபர்களிடம் தெரிவித்துள்ளார். (இ)

'வாணி கிரியேஷன்ஸ்'

(யாழ்ப்பாணம்)

திரைப்படங்களையும் நாடகங்களையும் தயாரிக்கும் நோக்குடன் விஜயதசமியன்று ஆனைக்கோட்டையில் 'வாணி கிரியேஷன்ஸ்' என்ற பெயரில் ஒரு கலை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் 'உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

போஷகர்: பி. வி. மொகமெட், தலைவர்: பல்கலைமணி க. தம்பிராசா, உப தலைவர்: இரா. பாலச்சந்திரன், செயலாளர்: கீதாலயம் காந்தன், தனாதிகாரி: வி. எஸ். இந்திரலிங்கம், பொதுசனத் தொடர்பு; கே. எஸ். மணியம், ரி. மணி, வெளித் தொடர்பு: எம். சிவபாலன். (அ)

இயன் சிமித்தை பரிகசித்தனர்

வாஷிங்டன், அக். 12

ரெடீஷியப்பிரதமர் திரு இயன்சிமித்துக்கு எதிராக வாஷிங்டனில் ஆர்ப்பாட்டம் நடத்திய நூற்றுக்கு மதிகமானோர் அவரைநேரில் கண்டதும் பகிஷ்கரித்தனர்.

கூட்டமொன்றில் கலந்து கொண்டுவிட்டுகூட்டமண்டபத்தைவிட்டு வெளியேறிய போதே ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரை நோக்கிப் பரிகாசமான முறையில் வார்த்தைகளைப்பிரயோகித்தனர். [இ]

விதை உருளைக் கிழங்கு

(மாவிட்டபுரம்)

கிரிமலை கமத் தொழில் சேவை நிலையத்திலிருந்து விதை உருளைக்கிழங்கு பெற விரும்பும் விவசாயிகளை அதற்கான முற்பணத்தைச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் விவசாய அடையாள அட்டைகளைக் காட்டி ஒரு பெட்டி விதை உருளைக்கிழங்குக்கு 650 ரூபா விதம் வங்கியில் முற்பணம் செலுத்தினால்தான் விதை உருளைக்கிழங்கைப் பெற முடியும் என மேற்படி நிலையம் அறிவித்துள்ளது (க)

தேநீர் விருந்து

[கோண்டாவில்]

சமூக சேவைகள் உதவியாளராக இருந்து அச்சுவேலி சிறுவர் நன்னடத்தைப் பாடசாலைக்கு ஆசிரியையாக மாற்றம் பெற்றுச் செல்லும் செல்வி புவனேஸ்வரி பொன்னம்பலம் தேநீர் விருந்தளித்துக் கௌரவிக்கப்பட்டார். இவ்விருந்து உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். குமாரசாமி தலைமையில்நடைபெற்றது.

இனஒதுக்கலை எதிர்த்த

காந்திமகான், நேருவுக்கு ஐ. நாவில் புகழாஞ்சலி

7 பேருக்கு தங்கப்பதக்கம்

நியூயோர்க், அக். 12

இனஒதுக்கல் நடவடிக்கைகளுக்கு எதிராக தீவிரமாக உழைத்த மறைந்த மேதைகளான மகாத்மாகாந்தி, ஜவஹர்லால்நேரு, மற்றும் காஞ்சின் முன்னாள் அதிபர் திரு. என்குருமா, அமெரிக்கப்பாடகர் போம்ரேப்ஸ் உட்பட 7பேர் ஐக்கிய நாடுகள் சபையில் கௌரவிக்கப்பட்டனர்.

ஐ. நா. பொதுச்சபையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இவர்கள் கௌரவிக்கப்பட்டு தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

அமரர்கள் மகாத்மாகாந்தி, ஜவஹர்லால்நேரு ஆகியோருக்குப் பல பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் புகழாஞ்சலி செலுத்தினர்.

அமரர் நேரு சார்பில் அவரின் மருமகன் தங்கப் பதக்கத்தைப்பெற்றார். [இ]

வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகம் சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் சர்வதேசலயன்ஸ் கழக தினத்தை முன்னிட்டு சுழிபுரம் விக்ரோறியாக்கல் லூரியில் சிரமதானப் பணியொன்றை நடாத்தினர். இக்கல்லூரியில் நீண்டகாலமாக உடைந்து பழுதடைந்து கிடக்கும் கதிரைகள், மேசைகள், வாங்குகள் என்பன போன்ற தளபாடங்களை இக்கழகத்தினர் சிரமதானம் மூலம் திருத்தி அமைத்துக் கொடுத்தனர்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் பி. பாக்கியநாதர் அத்தனாசியார், செயலாளர் சட்டத்தரணி திரு. க. குணரத்தினம் ஆகியோரும் கழக உறுப்பினர்களும் மற்றும் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி சாரணர் இயக்க மாணவர்களும் இச்சிரமதான பணியில் பங்குபற்றினர்கள். இறுதியில் கல்லூரி அதிபர் திரு. கே. அருணாசலம் தலைமையில் தேநீர் விருந்து உபசாரமும் நடைபெற்றது.

ரேட்டரி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ரேட்டரியன்ஸ் மகளிர் சங்கம் யாழ். பொதுசன நூலகத்திற்கு 6 கலன் நீர் கொள்ளக்கூடிய ஒரு அலுமினிய வடிநீர் பாத்திரத்தினை நேற்றுமுன்தினம் சங்கத் தலைவி திருமதி. வாணி மகேந்திரன், நூலகத் தலைவி திருமதி. ரூபா நடராசாவிடம் அன்பளிப்புச் செய்தார்.

நூலகத் தலைவி நன்றி தெரிவித்துக்கூறுகையில், முன்னாள் ரேட்டரியன்ஸ் தலையாகவிருந்த திருமதி. எஸ். சண்முகலிங்கம் நூலகத்திற்கு ஒரு வடிநீர்த் தொட்டி அவசியம் தேவை என்பதனை உணர்ந்து இதைப்பற்றி சங்க உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுத்தார் என்று கூறினர்.

திருமதி. எஸ். சண்முகலிங்கத்துக்கும், சங்கத் தலைவருக்கும், உறுப்பினர்கள் யாவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

மூதூர்வங்கிக்கொள்ளை:

கொள்ளையர் காரில்மறைவு

[மூதூர்]

மூதூரில் உள்ள வங்கியில் நடைபெற்ற துணிகரக் கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்தது. முகாமையாளரை நோக்கி இருதடவைகள் கொள்ளையர்கள் சுட்ட போதிலும் அவருக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் துப்பாக்கிகள் சகிதம் வந்த இரு இளைஞர்கள் வங்கி சேவகரைத் துப்பாக்கியைக் காட்டிமிரட்டி உள்ளே நுழைந்தனராம்.

இதனையடுத்து முகாமையாளர் பீதியடைந்து விலக முயலவே அவர்மீது இருதடவைகள் துப்பாக்கியால் சுட்டனராம், எனினும் துப்பாக்கிச் சூடு அவர்மீது படவில்லையாம்.

பணத்தைக் கொள்ளையிட முடியாது போகவே இளைஞர்கள் இருவரும் தனிப்பட்ட கார்களில் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூதூர் பொலிசார் இது தொடர்காக தீவிர புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (உ)

ரூபா 75,000 ஒதுக்கீடு

(வட்டுக்கோட்டை)

காரைநகர் வடக்கு கிராம சபைக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து 72 ஆயிரம் ரூபாவை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஒதுக்கியுள்ளார்.

இப் பணம் பலகாலமாக திருத்தப்படாதிருந்த ஐந்து வீதிகளை திருத்தி அமைப்பதற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

சீனாவின் புதிய வெளிநாட்டுக் கொள்கை

இந்திய வெளியுறவு மந்திரி மகிழ்ச்சி

லண்டன், அக். 12

வெளிநாடுகளுடன் உறவுகளை விருத்தி செய்வதற்காக சீனா புதிய கொள்கைகளைக் கடைப்பிடித்துவருகிறதென்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் லண்டனில்தெரிவித்துள்ளார்.

ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு நாடு திரும்பும் வழியில் லண்டனில் பத்திரிகையாளர் மத்தியில் உரை நிகழ்த்துகையிலேயே திரு. வாஜ்பாய் மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய-சீன எல்லைப்பிரச்னை குறித்து சகல தரப்பிலான பேச்சுவார்த்தைகளையும் நடத்த சீனா தயாராகவுள்ளதென்றும் இது தமக்குப் பெரு மகிழ்ச்சியென்றும் திரு. வாஜ்பாய் கூறினர்.

தமது சீனவிஜயம் ஒரு ஆய்வுப் பயணமென்றும் அவர்கூறினர். [இ]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
முத்துராமன்-ஸ்ரீவித்யா
காலங்களில் அவள்
வசந்தம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி ஆர்.-சரோஜாதேவி
பணக்காரக் குடும்பம்

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
Susan George
All Neat in
BLACK STOCKINGS

கடன்வழங்கு சபை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், வவனியா சுகாதார சேவைப் பிரிவுத் தினைக்களக் கடன் வழங்கு சபைகளின் அடுத்த ஆண்டு அலுவலர் தெரிவுக்கான நியமனப் பத்திரங்களை முறையே அக்டோபர் 20-ம் 23-ம் திகதி வரை யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக் கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிக் காட்சி விழா

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பாத்திமா திருத்தலத்தில் பாத்திமா நாயகியின் இறுதிக் காட்சி விழா இன்று நடைபெறவுள்ளது. இறுதிக் காட்சித் தினமான இன்று திருப்பலி, திருச்சொரூப ஊர்ளலம் திருச்சொரூப ஆசி வழங்கள் என்பனவும் நடைபெறவுள்ளன.

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
என்.டி.ராமராவ்-அஞ்சலிதேவி
நடித்த
பட்டி விக்கிரமாதித்தன்

விஸ்லர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - தேவிகா
நடித்த
வாழ்க்கைப்படகு
[புதிய பிரதி]

சாந்தி (யாழ்ப்பாணம்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன், ராஜஸ்ரீ, மனோகர்,
அனுபவம் புதுமை
மர்மம் ஹாஸ்யம் புதிய பிரதி

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 6 காட்சிகள் சனி,ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தேன்சிந்துதே வானம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
சிவாஜி ... சாவித்திரி ... பாலையா
சந்திரபாபு ... தங்கவேலு நடித்த
காத்தவராயன் (புத்தம்புதியபிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00, & 9-30 P. m.
Richard Harris in
20th Century Fox Present
BLOOM FIELD
(colour)

150வது தினசரி 4 காட்சிகள்
வெற்றித் திருநாள்
ராணி (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(சென்சார் கலர்)

ராஜா (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
மரிக்கார் ராமதாஸ்
ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

"நெசவாளர் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பலாம்"

— உதவிஆணையாளர்

(அரியாலை)

"அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ள புதிய திட்டத்தினால் நெசவுத் தொழிலாளர்கள் கொழும்பில் நூல் வாங்கும் அதே விலையில் யாழ்ப்பாணத்திலும் நூல் வேண்டக்கூடியதாக இருக்கிறது. "கைத்தறிமூலம்செய்யப்படும் உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் தேங்கிக்கிடக்கின்றன. சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான துணிகள் விற்பனை செய்யப்படாமல் இருக்கின்றன. இதனை மனதில் கொண்டு துணிகளின் விலைகளில் 20 வீதம் குறைத்ததினால் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான துணிகளை விற்பனை செய்யக்கூடியதாக இருந்தது".

வடபிரதேச குடிசைக் கைத்தொழில் இலாகா உதவி ஆணையாளர் திரு. எஸ் விசுவலிங்கம் அரியாலை காந்தி சன சமூகநிலைய மாதர் சங்கத்தின் ஆதரவில் வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்ற கைப்பணிப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாதர் சங்கத்தலைவி திருமதி ஏ மதியாபரணம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் திரு. விசுவலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: கைத்தொழில் முயற்சிகளில் அரசாங்கம் காட்டிவரும் முற்போக்கு நடவடிக்கைகளைப் பயன்படுத்தும் பலர் பெருந் தொகையான முதலீடுகளைக் கொண்டு மின்தறி நெசவு நிலையங்களை அமைக்கவே முயலுகின்றனர். இவைகளின் மூலம் பெருந்தொகையான துணிகள் உற்பத்திசெய்யப் பட்டால் அவைகளையும் விற்பனை செய்வதில் பெரும் பிரச்னைகள ஏற்படலாம்.

கைத்தறி நெசவாளர்கள் மொத்த நூல்களைக்கொண்டு கம்பளி, துவாய், கட்டில் விரிப்பு போன்ற பொருட்களை உற்பத்தி செய்யமுன்வரவேண்டும். இவைகளை நல்லவிலைக்கு விற்பனை செய்வதுடன், தரமானவற்றை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யமுடியும். கைத்தறிக்குவேண்டிய உபகரணங்களையும் பெருமளவில் இறக்குமதி செய்து நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்த விலையில் விநியோகம்செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

கைத்தறிமூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வேண்டிக்கொள்ளவும், அதற்கு வேண்டிய மூலப்பொருட்களை தொழிலாளர்களுக்கு வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இதன்மூலம் நெசவுத் தொழிலாளர்கள் பெரும் நன்மையடைவார்கள்.

மாதர் சங்க கைப்பணிப் பொருட்களைப் பார்வையிட்ட ஆணையாளர் மாதர் சங்க முயற்சிகளைப் பாராட்டினார்.

கூட்டத்தில் நிலையப் போஷகர் திரு. நா. பேரம்பலம், நிலைய உபதலைவர் திரு. சி. சந்திரமோகன் ஆகியோரும் பேசினார்கள். (க

எதிரி விடுதலை

(கொழும்பு)

18 போத்தல்களில் பயங்கர எரிபொருள் வைத்திருந்ததாக, குற்றஞ் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் நான்கு நாள் விசாரணையின் பின், எதிரியான ஜோசப் டீ பொன்சேக விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றதில் நீதிபதி சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரி சார்பில் சட்டத்தரணிகளான ஏட்லி பெரேரா, ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] டென்சில் குணரத்தினா, எம். ராஜபக்ஷா, ஜே. செல்வதுரை, எஸ். ஞானபண்டிதன், மில்ரோய் பொன்சேகா ஆகியோர் ஆஜராஞர்கள். (க)

உதைபந்தாட்ட முடிவுகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்றபோட்டியில் யூனியன் கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரியை 5—1 கோல்களால் வெற்றியிட்டியது.

இப்போட்டிக்கு நடுவராக திரு. ஏ. கமலநாதன் கடமையாற்றினார்.

யாழ். இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரியை 3—1 கோல்களால் வெற்றிஈட்டியது.

இப்போட்டிக்கு நடுவராக திரு. எம். ரி. இராஜேந்திரா கடமையாற்றினார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 2-ம் பிரிவில் குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் குழுவை கட்டுவன் மத்தி விஸ்வநாதப்புலவர் விளையாட்டுக்குழு 3-2 கோல்களால் வெற்றிபெற்றது.

இதே சுற்றுப் போட்டியில் குப்பிளான் யுனைற்டெட் விளையாட்டுக் கழக தை கட்டுவன் மத்தி விஸ்வநாதப்புலவர் விளையாட்டுக் கழகம் 5—2 கோல்களால் வெற்றி பெற்றது. (இ)

இன்றைய இராசிப்பலன்

புரட்டாதிமாதம் 27-ந் திகதி
வெள்ளிக்கிழமை
(13-10-78)

மேஷம்:- எதிர்பார்த்த வேதனம் இன்று தடைப்படலாம், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லைகளும் அதிகரிக்கும், சகோதரவழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு, தெய்வ நம்பிக்கை வேண்டும்.

இடபம்:- அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அறிஞர்களின் தொடர்பும் தாராளமாகக் கிடைக்கும், பொருள்வரவுக்கும் இடமுண்டு, சிறப்பான தினம்.

மிதுனம்:- புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும், புத்திரர்களால் புகழும் கிடைக்கும், இறை நம்பிக்கையுடன் இனிமை தவழும்.

கடகம்:- பகைமூட்டம் வட்டமிடும், வீணான வார்த்தைகளால் மனம் புண்படும், தொழில்துறையிலும் முட்டுக்கட்டைகள் தோன்றக் கூடும், மனத்திடம் வேண்டும்.

சிங்கம்:- குறுமையான சம்பவம் இடம்பெறும், வாழ்க்கையில் பசுமை தோன்றும், மகிழ்ச்சிகரகமான தினம்.

கன்னி:- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும், நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கிடமுண்டு, நன்றாக சிந்தித்த பின்பு செயலாற்றுக.

துலாம்:- தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள், சற்றுடலில் மதிப்புக்கிடமுண்டு, பிதாவழிமூலம் பொருள்வழிக்குமிடமுண்டு.

விருச்சிகம்:- முயற்சியால் முன்னேற்றத்திற்கிடமுண்டு பம்பரம்போல் சுழன்று பணியாற்றுவீர்கள், பாராட்டுதல்களுக்கும் இடமுண்டு.

தனுசு:- உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும், வியாபாரத் துறையில் விருத்தியுண்டு, தாய்வழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டு, உற்சாக தினம்.

மகரம்:- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், சிறிய தலையிடிக்குமிடமுண்டு, புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும், பிரயாணத்தைப் பின்போடுவது விரும்பத்தக்கது.

கும்பம்:- சிந்தனை அலைகளின் மத்தியில் சிரமப்படுவீர்கள், எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் தென்படும்.

மீனம்:- போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள், தனச்சிறப்புக்கும் இடமுண்டு, குடும்பத்திலும் அன்பு தவழும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

வல்லிபுர ஆழ்வார் ரதோற்சவம்

(புலோலி)

வரலாற்றுப்புகழ்மிக்க பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த இரதோற்சவம் சனிக்கிழமை காலை எட்டுமணிக்கு நடைபெறவுள்ளது. முன்பு மாலை நடைபெற்றுவந்த இரதேற்சவம் சென்ற வருடம் தொடக்கம் காலை நடைபெறுகிறது.

இவ்வுற்சவங்களையொட்டி பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ சகல இடங்களுக்கும் விசேட பஸ் சேவையினை ஒழுங்கு செய்துள்ளது. அத்துடன் பாதுகாப்பு கருதி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் ஹாட்லிக்கல்லூரி ஆகியனவற்றின் சாரணஇயக்க மாணவர்கள் கடமையிலீடுபடுவார்கள்.

தமிழினத்தின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தியப்பிரமாணம் செயயாமல் விட்டால் 3 மாத காலத்தில் பதவிகள் காலியாகும். புதிய அரசியலமைப்புபடி உபதேர்தல் எதுவும் நடைபெறுது மீண்டும் அதே 17 பேரையும், கூட்டணிதலைமைப்பீடம் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தால் ஒருமாத காலத்திற்குள் 17 பேரும் மீண்டும் எம். பி. யாவார்கள் அவர்கள் மீண்டும் சத்தியப்பிரமாணம் எடுக்காமல்விட்டால் பதவிகள் 3 மாதத்தில் காலியாகும். மீண்டும் அதே 17 பேரையும், கூட்டணி தலைமைப்பீடம் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்ததும் அந்த 17 பேரும் மீண்டும் எம். பி.யாவார்கள் இப்படி தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் அரசுக்கே பெரும் நெருக்கடியாக இருப்பதோடு உலகநாடுகள் எல்லாம் தமிழினத்திற்கு உண்மையாக அநீதி செய்யப்படுகிறதென்பதை அறிந்துகொள்வார்கள் இந்த சந்தர்ப்பத்தை கூட்டணியினர் தவறிவிட்டனர்,

திருவாளர்கள் ரி. மகேந்திரராசா, வி ஆனந்தராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். (க-அ)

திருவையாறு திட்டத்திற்கு மின்சாரம் கிடைக்கும்

கிளிநொச்சி எம். பி. தகவல்

(கிளிநொச்சி)

திருவையாறு விவசாயிகளுக்கு வெகுவிரைவில் மின்சாரம் கிடைக்கவிருக்கின்றது. அதற்கான முயற்சிகளைத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கின்றேன். திருவையாற்றைப் போல பல கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன.

திருவையாற்றில் நடைபெற்ற விவசாயிகள் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பேசிய கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருவையாறில் திரு. கேதீஸ்வரன் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

இன்றைய விவசாயிகளுக்குப் பெரும் பிரச்னைகள் பலவுண்டு. அவற்றை ஒவ்வொருவராய்ச் சொல்லித்தீர்வு காண்பதிலும் பார்க்க குழுவாக, ஸ்தாபன ரீதியாக பிரச்னைகளை எடுத்துரைத்துத் தீர்வு காண்பது இலகுவாகும். அத்தகைய முறையில் இங்கு ஒரு விவசாயிகள் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது வரவேற்கக் கூடியதாகும். [க]

நாளை ஆரம்பமாகும் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் இலங்கை விழிப்புலனிழந்தோர் சம்மேளனமும், விழிப்புலனிழந்தோர் சமூகமும் சேர்ந்து நடாத்தும் கண்காட்சியும், அகில உலக வெள்ளைப்பிரம்பு பாதுகாப்புத் தினமும் நாளைக் காலை 9 மணிக்கு ஆரம்பித்து மாலை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. யாழ் மத்திய கல்லூரியிலும் யாழ். திறந்த வெளியரங்கிலும் இது நடைபெறும்

இவ்வைபவத்திற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார். யாழ். மத்தியகல்லூரியில் விழிப்புலனிழந்தோர் கைப்பணிகள், அவர்கள் உபயோகிக்கும் கருவிகள் காட்சிக்கு வைக்கப்படும். விழிப்புலனிழந்தோர் வேலை செய்யும் முறைகளும் பார்வையாளருக்கு நேரில் செய்து காண்பிக்கப்படும்.

பிற்பகல் 4 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் ராஜா சினிமா அரங்கினுக்கு அருகில் ஆரம்பிக்கும் விழிப்புலனிழந்தோரின் வெள்ளைப்பிரம்பு தாங்கிய அணிவகுப்பு வெலிங்டன் சினிமா அரங்குச் சந்தி வழியாக பஸ்நிலையத்தை அடைந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ். திறந்தவெளி அரங்கினை வந்தடையும்.

யாழ் திறந்த வெளி அரங்கில் மாலை 6 மணிக்கு விழிப்புலனிழந்தோர் அளிக்கும் இசை நாடக விருந்தும் பொதுக்கூட்டமும் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினரான யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ பங்கு பற்றுகின்றார். (உ)

வர்த்தகர்கள் கவலை

[யாழ்ப்பாணம்]

சில தினங்களாக யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியில் இரவு 6 மணி முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருவதால் யாழ். நகை வியாபாரிகள் கவலை தெரிவிப்துள்ளனர்.

மின்சாரம் இப்பகுதியில் தொடர்ந்து துண்டிக்கப்படுவதால் கொள்ளைகள் இடம்பெறலாம் என அஞ்சுகின்றனர். இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகராட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானத்திடம் வற்புறுத்தியுள்ளனர்.

யாருடையது?

நேற்று நண்பகல் யாழ். பஸ் நிலையத்திற்கு அருகாமையில் துணிப் பை ஒன்று சாம்பமூர்த்தி அன்ட் கொம்பனி கிளை முகாமையாளர் திரு. த. இராசரத்தினத்தால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. துணிப்பைக்குள் மூன்று திறப்புகளும் ரொக்கப் பணமும் உண்டு. உரியவர்கள் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். [ஆ-ரி[

வயோதிபமாது கோரக்கொலை

(யாழ்ப்பாணம்)

வயோதிபப்பெண் ஒருவர் கோரமாகக் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் அவரது வீட்டில் இறந்து கிடந்தார்.

இச்சம்பவம் நீர்வேலிவடக்கில் நேர்ந்துள்ளது. நீர்வேலி வடக்கைச்சேர்ந்த அறுபது வயதுள்ள நன்னி இளையபிள்ளையின் மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பதில் நீதவான் திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவருக்கு பிள்ளைகள் இல்லையென்றும்,கணவனுடன் தனியாக வாழ்ந்துவந்தாரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சிகைஅலங்காரத் தொழிலாளியான கணவன் சின்னத்தம்பி தன்னி சாட்சியமளிக்கையில் வழக்கம்போல் அன்று காலை 6-30 மணிக்கு கிராமத்திற்குச் சென்று தொழிலை முடித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிவந்தபோது மனைவி வெட்டப்பட்டு இறந்துகிடப்பதாக அயலவர்கள் கூறியதாகச்சொன்னார். தான் பார்த்தபோது மனைவி இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்ததாகவும் சொன்னார்.

அயலவரான சின்னத்துரை சிவக்கொழுந்து கூறியதாவது:

"காலை 8-30 மணியளவில் இறந்தவர் வீட்டில் அவலக் குரல் கேட்டு பின்னர் அடங்கிவிட்டது. நான் ஓடிப்போய்ப் பார்த்தேன். இரத்தவெள்ளத்தில் வீட்டின் பின்பக்கத்தில் இறந்தவர் கிடந்தார். கணவன் வந்தபோது அவரிடம் மனைவி இறந்துகிடப்பதாகச் சொன்னேன்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை பதில் நீதவான் ஒத்திவைத்தார். [க]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அதாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889 - Registered as Newspaper in SriLanka.

40 இளைஞர் இன்று ஆஜர்!

[யாழ்ப்பாணம்[

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இக்கொள்ளை தொடர்பாக சந்தேகநபர்களான 40 தமிழ் இளைஞர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் இன்று காலை கோர்ட்டில் ஆஜர் சய்யப்படுவார்கள். [செ[

பரதநாட்டிய அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

செல்வி வாணி கந்தவனத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமையில் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

பேராசிரியர் திரு. சு, வித்தியானந்தன் தம்பதிகளும்கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தம்பதிகளும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றார்கள்.

பிரபல நடனஆசிரியர் திரு டபிள்யு. தொம்மைக்குட்டியின் மாணவியான இவர் குரும்பசிட்டியைச் சேர்ந்த கவிஞர் கந்தவனம் தம்பதிகளின் புதல்வியாவார்.

கேதாரகௌரி விரதம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் கடந்த 11ம் திகதி முதல் கேதாரகௌரி விரதம் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. தொடர்ந்து 21 தினங்கள் இவ்விரத அநுஷ்டானம் இடம்பெறும். தீபாவளியன்று இறுதித்தினமாகும்.]உ[

தங்கப்பதக்கம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கராட்டிச் சங்கத்தினால் சுகததாசா உள்விளையாட்டரங்கில் கடந்த மாதம் நடாத்தப் பெற்ற தேசிய கராட்டி சாம்பியன் போட்டியில் ஆவரங்காலைச் சேர்ந்த எம். சிவானந்தன் உயர மண்ணிறப் பட்டி வீரர்களில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும் இலங்கையின் தேசிய கராட்டிச் சம்பியனுக்கான (சொட்டாகன் கறுப்புப் பட்டி வீரர்கள் உட்பட) போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் தட்டிக்கொண்டார்.

இவர் 1975-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் முதல்முறையாக நடாத்தப்பெற்ற கராட்டிப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், அதே ஆண்டில் இலங்கை தேசிய கராட்டிப் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது. அச்சுவேலி சிறிஸ்தவக்கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர் ஒரு சிறந்த உதைபந்தாட்டவீரருமாவார்.

தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

உணவு, உடைகள்

லயன்ஸ் கழகம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம், யாழ். நகரில் ஏற்பட்ட தீவிபத்தில் பாதிக்கப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு யாழ்.லயன்ஸ் கழகம், இலவச உணவு, உடை வழங்கவிருக்கிறது.

நேற்றைய தினம், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு லயன்ஸ் கழகத் தலைவர் திரு. எஸ். இராஜேந்திரா தலைமையில் சென்ற குழு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியது. உதவி வழங்குவதற்கான முயற்சியில் இவர்கள் ஈடுபடவிருக்கின்றனர்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். (கெ)

கொழும்புத்துறைக் கலாசாலையில் மீண்டும் சமயநெறி

(இமையாணன்)

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சில தினங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சமயபாடப் பயிற்சி நெறி வகுப்புகள் மீண்டும் அமைச்சின் உத்தரவைத் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன.

இப்பயிற்சி நெறியை நிறுத்திவைக்குமாறு கடந்த வாரம் அமைச்சின் கீழியங்கும் பாடவிதானச் சபை, கலாசாலை அதிபருக்கு அறிவித்திருந்ததும், இதனைத் தொடர்ந்து யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கமும் கல்வியமைச்சுக்கு அவசரத் தந்தி அடித்திருந்ததும், ஆசிரிய மாணவர்கள் மகஜர் அனுப்பியிருந்ததும் தெரிந்ததே.

இவ்வாட்சேபங்களைத் தொடர்ந்து, 'பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கும்படி கல்வி அமைச்சிலிருந்து வந்த கடிதம் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்த வாரம் தொடக்கம் பயிற்சி நெறிகள் தொடர்ந்து நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி பயிற்சி நெறிக்கு 'பி' ஆசிரிய மாணவர்கள் போதாதென்று காரணம் காட்டி, இப்பயிற்சியை நிறுத்தும்படி பாடவிதானச் சபை, கடந்த வாரம் திடீரென உத்தரவு பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

ஜமேய்க்கா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பூண்டுள்ளோம் என்றார்.

இலங்கையின் புதிய அரசியலமைப்பு பொதுநல அமைப்பு நாடுகளிலேயே தனித்துவமானதாகவிருக்கிறது என்றும் வெஸ்ட்மினிஸ்ட்டர் அரசமைப்பு முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இது இருக்கின்றது என்றும் கூறிய அமைச்சர் திரு. அத்துலத் முதலி இதுதொடர்பாக எவருடனும் பந்தயம்கட்டவும் தயாராக இருப்பதாகக் கூறினார்.

இலங்கையைப்போன்று ஜமேய்க்காவும் தனது அரசியலமைப்பை விரைவில் முற்றாக மாற்றி அமைக்கும் என்றார் அவர்.

மகாநாட்டில் கலந்துகொண்ட ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த டி அல்விஸ் யாராவது பந்தயம் கட்டினால் 'ஒட்டல் ஒபேறோ'யில் அவர் விருந்தளிப்பார் என்று நகைச்சுவையாகக் கூறினார்.

வர்த்தக அமைச்சர் மேலும் பேசுகையில், ஈராக் தேசம் 9 கோடி டாலர் பெறுமதியான எண்ணெயை இலங்கைக்குக் கடனாகத் தருவதற்கு முன்வந்துள்ளது என்றார். ஏற்றுமதியாகும் இலங்கைத் தேயிலையில் 80 வீதத்தை ஈராக் கொள்வனவுசெய்ததாகவும் அங்கு 1200 இலங்கையர்கள் தொழில் புரிவதாகவும் கூறினார். இவர்கள் மாதம் ஒன்றுக்கு சுமார் 1532 ரூபாய் சம்பளம் பெறுவதாகவும் சொன்னார். [ம

தமிழ்.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களப்புப் பகுதிகளில் இவர்களின் நிகழ்ச்சிகளுக்கு ஏன் ஏற்பாடு செய்யவில்லையென்று தூதரக முதலாவது செயலாளரிடம் நிருபர்கள் கேட்டபோது, இந்த ஒழுங்குகளை இலங்கைக் கலாசாரப் பகுதியினர்தான் செய்தனரென்றும் அவர்களிடமே இதைக் கேட்கும்படியும் அவர் பதிலளித்தார்.

திரு. ஜயதிலகா இதற்குப் பதிலளிக்கையில், சம்பந்தப்பட்ட பகுதிகளின் அரசாங்க அதிபர்கள்தான் இந்த ஒழுங்குகளைச் செய்வார்கள் என்றார். அவர்களிடம் கேட்டீர்களா? என்றதற்கு, இல்லையென்று கூறிய அவர், சோவியத் குழுவினர் குறுகியகாலமே இலங்கையில் இருப்பார்களென்றும், தொலைதூரங்களுக்குப் போய்வருவதில் சிரமங்கள் இருப்பதாலும் இந்த ஏற்பாடுகள்செய்யப்படவில்லை என்றார். (ம)

எம். எல். பி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞராய்ச்சிமகாநாட்டை திரு தேவசேனபதி ஆரம்பித்து வைப்பார். திருமதி எம். எல். வசந்தகுமாரி தலைமை வகிப்பார்'

இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோவிலில் நடைபெற்றுவரும் ''கம்ப ராமாயண'' விரிவுரையில் இன்றுமாலை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா ''கும்பகர்ணன்'' என்னும் தலைப்பில் கதாப்பிரசங்கம் செய்வார். (கெ)

நேரடி.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மெல்லும் பிரமுகர்கர்களும் வரவேற்றனர்.

பின்னர் திரு. மக்னமாரா நிதியமைச்சுக்கு விஜயம் செய்து நிதியமைச்சருடன் ஆலோசனை நடத்தினார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும், துரிதகால திட்டங்களையும் குறித்து அவர் திருப்தி தெரிவித்தார். இலங்கைக்குத் தொடர்ந்து உதவிகள் வழங்குவது குறித்து அவர் உறுதியளித்தார்.

திரு. மக்ளமாரா நாளைய தினம் ஜனாதிபதியையும் இதர பிரமுகர்களையும் சந்திப்பார். ஹெலிகொப்டர் மூலம் மகாவலி அபிவிருத்தித் திட்டதையும் கலாவெல குடியிருப்புத் திட்டதையும் அவர் பார்வையிடுவார்.

(புலோலி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் மருந்துகட்டும் பண்டேஜ், பஞ்சு போன்றவற்றிற்குத் தட்டுப்பாடேற்பட்டுள்ளதையடுத்து இங்கு சிகிச்சைபெறச் செல்லும் நோயாளிகள் பெரும் சிரமப்படவேண்டியுள்ளது (க)